புதுக்கோட்டை முதன்மை மாவட்ட நீதிமன்றம்,
புதுக்கோட்டை நீதித்துறை அலகில் உள்ள சுருக்கெழுத்து தட்டச்சர் நிலை -3 பணியிடங்களை நிரப்பும் பொருட்டு தகுந்த நபர்களை தேர்ந்தெடுப்பதற்கான விளம்பர அறிக்கை.

மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்ற நீதி பேராணை W.P.No.26162/2010, நாள் 02.08.2012 மற்றும் W.A.No.1027/2013, நாள் 09.06.2014 மற்றும் G.O(Ms.) No.44, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு (T2) துறை, நாள்: 11.3.2015

புதுக்கோட்டை மாவட்ட நீதித்துறை அலகில் தமிழ்நாடு நீதித்துறை அமைச்சுப்பணி காலியாக உள்ள சுருக்கெழுத்து தட்டச்சர் நிலை-3 (முற்றிலும் தற்காலிகமானது) பதவிகளுக்கு நியமனம் செய்யும் பொருட்டு தகுதி வாய்ந்த நபர்களிடமிருந்து விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன. தகுதியுடைய நபர்கள் உரிய சான்றிதழ்களின் ஜெராக்ஸ் நகல்களில் **சுயசான்றொப்பமிட்டு** (Self attestation), இணைத்து **பதிவு தபால் மூலம்** கீழே குறிப்பிடப்பட்ட உரிய படிவத்தில் விண்ணப்பிக்கலாம்.

பதவியின் பெயர்	**சுருக்கெழுத்து தட்டச்சர் (நிலை - III) (முற்றிலும் தற்காலிகமானது)**
சம்பள முறை	Level 10 (Rs. 20,600 - 65,500) + இதர படிகள்
காலி பணியிடங்கள்	10 (பத்து)
கல்வித்தகுதி	1. குறைந்தபட்ச பொதுக் கல்வித் தகுதி அதாவது பள்ளியிறுதி வகுப்பில் (பத்தாம் வகுப்பு) அல்லது அதற்கு சமமான கல்வித் தகுதியில் தேர்ச்சி பெற்று, மேல்நிலைப்பள்ளிக் கல்வி அல்லது கல்லூரிக் கல்வி படிப்பில் சேர்வதற்கான தகுதி பெற்றிருத்தல் வேண்டும். 2. அரசு தொழில்நுட்பத் தட்டச்சு மற்றும் சுருக்கெழுத்துத் தேர்வு இரண்டிலும் கீழ்கண்டவாறு தேர்ச்சி பெற்றிருத்தல் வேண்டும். i. தமிழ் மற்றும் ஆங்கிலத்தில் முதுநிலை **(அல்லது)** ii. தமிழில் முதுநிலை மற்றும் ஆங்கிலத்தில் இளநிலை **(அல்லது)** iii. ஆங்கிலத்தில் முதுநிலை மற்றும் தமிழில் இளநிலை **(மற்றும்)** vi. கணினி அறிவு பெற்றிருக்க வேண்டும். **குறிப்பு** **சுருக்கெழுத்துத் தட்டச்சர் (நிலை-3) தெரிவு முறை:** 1) முதலில் இனம் (i) இல் குறிப்பிட்டுள்ள தொழில் நுட்பக் கல்வித் தகுதியுடைய விண்ணப்பதாரர்கள் முதலில் தெரிவு செய்யப்படுவர்.

	2) இனம் (i) இல் குறிப்பிட்டுள்ள தொழில் நுட்பக் கல்வித் தகுதியுடைய விண்ணப்பதாரர்கள் கிடைக்கப் பெறாவிடில் இனம் (ii) -இல் குறிப்பிட்டுள்ள தொழில் நுட்பக் கல்வித் தகுதியுடைய விண்ணப்பதாரர்கள் தெரிவு செய்யப்படுவர். 3) இனம் (i) மற்றும் (ii) -இல் குறிப்பிட்டுள்ள தொழில் நுட்பக் கல்வித் தகுதியுடைய விண்ணப்பதாரர்கள் கிடைக்கப் பெறாவிடில் இனம் (iii) -இல் குறிப்பிட்டுள்ள தொழில் நுட்பக் கல்வித் தகுதியுடைய விண்ணப்பதாரர்கள் தெரிவு செய்யப்படுவர். **குறிப்பு** **"இடைநிலை" தரச்சான்றிதழை "முதுநிலை" தரத்திற்கு இணையானதாக கருத இயலாது.**

குறிப்பு:

(1) பள்ளியிறுதி வகுப்பு (பத்தாம் வகுப்பு) அல்லது அதற்கு சமமான கல்வியில் தேர்ச்சி பெறாதவர்கள் அதற்கு மேற்பட்ட கல்வித்தகுதியினைப் பெற்றிருந்தாலும் விண்ணப்பிக்கத் தகுதியற்றவர்களாவர்.

(2) இணையான கல்வித்தகுதியினைக் கோரும் விண்ணப்பதாரர்கள் அதற்கு சான்றாக சமர்ப்பிக்கும் அரசாணை, இத்தேர்விற்கு அறிவிப்பு வெளியான நாளுக்கு முன்னதாக வெளியிடப்பட்டிருக்க வேண்டும். அறிவிப்பு வெளியான நாளுக்குப்பின் வெளியிடப்பட்ட அரசாணை ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

காலிபணியிடங்களுக்கான வயது வரம்பு

01.09.2021 ம் தேதியன்று வயது வரம்பு

பிரிவுகள்	குறைந்தபட்ச வயது வரம்பு	அதிகபட்ச வயது வரம்பு		
		O.C.	B.C. and M.B.C	SC/ST
பொது	18 வயது நிறைவடைந்து இருக்கவேண்டும்	32	34	37
மாற்றுத் திறனாளி (40% ஊனம்)		32 + 10= 42	34 + 10 = 44	37 + 10 = 47
குறைந்தபட்ச பொது கல்வி தகுதி எஸ்.எஸ்.எல்.சி / பத்தாம் வகுப்பு தேர்ச்சி உள்ள பதவிக்கு விண்ணப்பிக்கும் அதிக கல்வி தகுதி பெற்றவர்கள்		32	No Age Limit	No Age Limit
முன்னாள் இராணுவத்தினர்		No Age Limit	No Age Limit	No Age Limit
குறைந்தபட்ச பொது கல்வி தகுதி எஸ்.எஸ்.எல்.சி / பத்தாம் வகுப்பு தேர்ச்சி உள்ள பதவிக்கு விண்ணப்பிக்கும் அதிக கல்வி தகுதி பெற்ற ஆதரவற்ற விதவைகள்		No Age Limit	No Age Limit	No Age Limit

(வயது வரம்பு சலுகைகள் நடைமுறையிலுள்ள அரசு ஆணைகள் மற்றும் அரசு விதிமுறைகளின் படி செயல்படுத்தப்படும்)

குறிப்பு : மாண்பமை சென்னை உயர் நீதிமன்றத்தினால் நீதிப்பேராணை எண்.**6378/2018** மற்றும் தொகுப்பு வழக்குகளில் **30.04.2019** ம் தேதியன்று பிறப்பிக்கப்பட்ட உத்தரவின்படி தமிழ்நாடு நீதித்துறையில் தற்காலிகமாக பணிபுரிந்த அல்லது பணிபுரியும் பணியாளர்கள் அவர்கள் ஆரம்பத்தில் **10(அ)(i)** என்ற அடிப்படையில் பணியமர்த்தப்பட்டபோது மேற்குறிப்பிட்ட வயது வரம்பு தகுதியினை பெற்றிருப்பின் அவர்களுக்கு மேலே குறிப்பிடப்பட்ட அதிகபட்ச வயது வரம்பு பொருந்தாது என தெரிவிக்கப்படுகிறது.

இன சுழற்சி முறை பின்வருமாறு

வ. எண்.	இன சுழற்சி எண்.		பணியிடங்களின் எண்ணிக்கை
1	24	B.C. (other than BCM)	1
2	25	G.T. (NP)	1
3	26	S.C. (W)	1
4	27	G.T.	1
5	28	M.B.C./DC - (P)	1
6	29	G.T. (W)	1
7	30	B.C. (other than BCM) (W)	1
8	31	G.T. (Ex.M)	1
9	32	S.C.(A) (NP) (PSTM)	1
10	33	M.B.C./DC (NP)	1

பணி சான்றிதழ்

மாண்பமை சென்னை உயர் நீதிமன்றத்தினால் நீதிப்பேராணை எண்.**6378/2018** மற்றும் தொகுப்பு வழக்குகளில் **30.04.2019** ம் தேதியன்று பிறப்பிக்கப்பட்ட உத்தரவின்படி தமிழ்நாடு நீதித்துறையில் **10(அ)(i)**ன் கீழ் பணிபுரிந்த அல்லது பணிபுரியும் தற்காலிக பணியாளர்கள் தங்களுடைய விண்ணப்பதுடன் உரிய அதிகார அலுவலகத்தில் பெறப்பட்ட பணி சான்றிதழின் நகலை இணைத்து அனுப்ப வேண்டும். பணி சான்றிதழ் பெறுவதில் ஏதேனும் சிரமம் உள்ள விண்ணப்பதாரர்கள் அவர்கள் விண்ணப்பிக்கும் பதவிக்கு அறிவிக்கப்படும் எழுத்து தேர்வின் தேதிக்கு முன்பாக மேற்படி பணி சான்றிதழை தாக்கல் செய்வதற்கான உறுதிமொழியினை விண்ணப்பத்தில் குறிப்பிட்டு அனுப்பினால் போதுமானது.

தேர்ந்தெடுக்கபடும் முறை:

(அ) எழுத்து தேர்வு முறை :

எழுத்து தேர்வில் 35 கேள்விகள் (கொள்குறி வகை) கொடுக்கப்பட்டு இருக்கும். ஒவ்வொரு சரியான விடைக்கும் 2 மதிப்பெண்கள் வழங்கப்படும். கால அளவு 60 நிமிடங்கள் (One Hour).

வினாத்தாள் கீழ்க்கண்ட பகுதிகளை உள்ளடக்கியது :

பகுதி அ : பொது அறிவு

பகுதி ஆ (i) : பொது தமிழ்

(ஆ) செய்முறை தேர்வு (15 மதிப்பெண்கள்)

சுருக்கெழுத்து செய்முறை தேர்வு நடைபெறும், அதில் சுருக்கெழுத்தில் எடுக்கப்பட்டதை கணினியில் தட்டச்சு செய்து காட்ட வேண்டும்.

◆ நேர்முகத் தேர்வுக்கு, இட ஒதுக்கீட்டு விதியைப் பின்பற்றி, காலிப் பணியிடங்களின் எண்ணிக்கை மற்றும் தகுதிபெற்ற விண்ணப்பதார்களைப் பொறுத்து 1:5 அல்லது புதுக்கோட்டை முதன்மை மாவட்ட நீதிபதி, அவர்களது முடிவின் அடிப்படையில், விண்ணப்பதாரர்களின் எண்ணிக்கை முடிவு செய்யப்படும்.

◆ நேர்முகத் தேர்வின் நோக்கமே விண்ணப்பதாரரின் மனவிழிப்புநிலை, திறன்கள், மனப்பாங்கு, ஒழுக்கநெறி, தகவல் தொடர்பு திறன், பண்பு மற்றும் தகுதியுடைமை ஆகியவற்றை மதிப்பீடு செய்வதாகும்.

குறிப்பு : விண்ணப்பதாரர்களால் தாக்கல் செய்யப்படும் அனுபவ சான்றிதழை மட்டுமே அடிப்படையாக கொண்டு அவர் தகுதியானவர் அல்லது பொருத்தமானவர் என தானாகவே எவ்வித கருத்தும் கொள்ளப்படமாட்டாது.

கடைசி நாள்: விண்ணப்பங்களை (ஒரு பாஸ்போர்ட் அளவு புகைப்படம் உரிய இடத்தில் ஒட்டப்பட்டு, உரிய சுயசான்றொப்பத்துடன்) தற்போது பணி செய்யும் விபரங்களுடனும் (எதுவும் இருப்பின்) அனைத்து கல்விச்சான்றிதழ்கள், ஜாதிச்சான்றிதழ் மற்றும் முன்னுரிமைக்கான சான்றிதழ்கள் (ஊனமுற்றோர், ஆதரவற்ற விதவை மற்றும் கலப்புத் திருமணம் போன்றவை) மற்றும் பிற சான்றிதழ்களின் நகல்களை உரிய சுய சான்றொப்பத்துடன் (Self attestation) கீழ்க்காணும் முகவரிக்கு **18.10.2021**ம் தேதிக்குள் இவ்வலுவலகத்திற்கு கிடைக்குமாறு **பதிவு தபாலில் மட்டுமே** அனுப்ப வேண்டும்.

முதன்மை மாவட்ட நீதிபதி,
முதன்மை மாவட்ட நீதிமன்றம்,
புதுக்கோட்டை மாவட்டம் - 622 001.

(காலதாமதமாக கடைசி நாள் அன்று அலுவலக நேரம் அதாவது மாலை 5.45 க்கு பிறகு பெறப்படும் விண்ணப்பங்கள் எக்காரணம் கொண்டும் ஏற்றுக்கொள்ளபடமாட்டாது)

மேற்கண்ட நியமனத்திற்கு தகுதியான நபர்களை தேர்வு செய்யவோ அல்லது நேர்காணலை ஒத்தி வைக்கவோ மற்றும் சூழ்நிலை ஏற்படின் இந்த விளம்பர அறிக்கையை எவ்வித முன்னறிவிப்பும் இன்றி ரத்து செய்யவோ முதன்மை மாவட்ட நீதிபதி, புதுக்கோட்டை அவர்களுக்கு முழு அதிகாரம் உள்ளது. இத்துடன் தெரிவிக்கப்பட்டுள்ள விண்ணப்பதாரர்களுக்கான அறிவுரையை தவறாது படித்து பின்பற்றுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது. சொல்லப்பட்டுள்ள அறிவுரைகள் பின்பற்றப்படாமல் இருக்கும்பட்சத்தில், பெறப்படும் விண்ணப்பங்கள் நிராகரிப்புக்கு உள்ளாக்கப்படும்.

புதுக்கோட்டை
நாள்: 27.09.2021

முதன்மை மாவட்ட நீதிபதி,
முதன்மை மாவட்ட நீதிமன்றம், துக்கோட்டை.

விண்ணப்பதாரர்களுக்கான அறிவுரைகள்

1. விண்ணப்பங்கள் வரையறுக்கப்பட்ட படிவத்தில் பூர்த்தி செய்யப்பட்டு (உரிய படிவத்தினை இந்நீதிமன்ற இணையதள வலைதளத்திலிருந்து பதிவிறக்கம் செய்யவும் - website : **https://districts.ecourts.gov.in/pudukkottai**) **பதிவுத்தபால்** மூலமாக மட்டுமே அனுப்பப்பட வேண்டும். வேறு வகையில் அனுப்பப்படும் விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது.

2 ஒரு தபால் உறையில் ஒரு விண்ணப்பம் மட்டுமே அனுப்பப்பட வேண்டும்.

3. விண்ணப்பதாரர் ஒரு கவரில் தனது சுய விலாசத்தை எழுதி அதில் ஸ்டாம்ப் (ரூ.30) ஒட்டப்பட்டு பூர்த்தி செய்த விண்ணப்பத்துடன் அனுப்ப வேண்டும்.

4. பாஸ்போர்ட் அளவு புகைப்படம் விண்ணப்பத்தின் உரிய இடத்தில் ஒட்டப்பட்டு, புகைப்படத்தின் மேல் விண்ணப்பதாரர் கையொப்பம் இட வேண்டும். மேலும் உரிய சான்றிதழ்களின் நகல்கள் சுய சான்றொப்பம் (Self Attestation) செய்து விண்ணப்பத்துடன் இணைத்து அனுப்ப வேண்டும். எக்காரணம் கொண்டும் அசல் சான்றிதழ்களை விண்ணப்பத்துடன் இணைத்து அனுப்பக் கூடாது. இருப்பினும், நேர்முகத் தேர்விற்கு தெரிவு செய்யப்படும் விண்ணப்பதாரர்கள், நேர்முகத் தேர்வில் கலந்து கொள்ளும் போது அனைத்து அசல் சான்றிதழ்களையும் தாக்கல் செய்யவேண்டும். சுயசான்றொப்பமிட்ட நகல்கள் இணைக்கப்படாத விண்ணப்பங்கள் எவ்வித முன்னறிவிப்புமின்றி முற்றிலும் நிராகரிக்கப்படும்.

5. முழுமையாக பூர்த்தி செய்யப்படாத விண்ணப்பங்கள் மற்றும் தவறான தகவல்கள் கொண்டுள்ள விண்ணப்பங்கள் முற்றிலும் நிராகரிக்கப்படும்.

6. விண்ணப்பத்தில் குறிப்பிடப்பட்டிருக்கும் தகவல்கள் தவறானவை என தெரியவரும் பட்சத்தில், அவ்விண்ணப்பதாரரின் விண்ணப்பம் எவ்வித முன்னறிவிப்புமின்றி நிராகரிக்கப்படும்.

7. முன்னுரிமை கோரும் நேர்வுகளில், முன்னுரிமைக்கான உரிய சான்றிதழ்களின் நகல்கள் விண்ணப்பத்துடன் இணைக்கப்பட வேண்டும். தவறும்பட்சத்தில் விண்ணப்பம் முற்றிலும் நிராகரிக்கப்படும்.

8. தமிழ்வழிக் கல்விக்காக ஒதுக்கப்பட்ட இனசுழற்சி முறைக்கு, உரிய சான்றிதழ்களின் நகல்கள் இணைக்கப்பட வேண்டும். தவறும்பட்சத்தில் விண்ணப்பம் முற்றிலும் நிராகரிக்கப்படும்.

9. விண்ணப்பத்தாரர் தனது இருப்பிடச் சான்று குறித்து (i) ஆதார் அட்டை, (ii) வாக்காளர் அடையாள அட்டை, (iii) ஓட்டுநர் உரிமம், (iv) குடும்ப அட்டை, (v) வங்கிக் கணக்கு புத்தகத்தின் முதல் பக்கம் ஆகியவற்றில் ஏதேனும் இரண்டின் நகல்களை சுய சான்றொப்பமிட்டு விண்ணப்பத்துடன் இணைத்து அனுப்ப வேண்டும். தவறும்பட்சத்தில்

விண்ணப்பம் முற்றிலும் நிராகரிக்கப்படும்.

10. விண்ணப்ப படிவத்தின் குறிப்பிட்ட இடத்தில், விண்ணப்பதாரரின் கையொப்பம் இல்லாத விண்ணப்பங்கள் முற்றிலும் நிராகரிக்கப்படும்.

11. பொய்யான வாக்குறிதிகளை சொல்லி, தவறான வழியில் வேலை வாங்கி தருவதாக கூறும் இடைத்தரகர்களிடம் விண்ணப்பதாரர்கள் மிகவும் கவனமாக இருக்குமாறு எச்சரிக்கப்படுகிறார்கள்.

12. இதுபோன்ற தவறான மற்றும் நேர்மையற்ற நபர்களால் விண்ணப்பத்தாரர்களுக்கு ஏற்படும் எந்தவொரு இழப்புக்கும் இந்நீதிமன்றம் பொறுப்பல்ல.

13. தமிழ்நாடு நீதி அமைச்சுப் பணி விதி 16(அ)(1)ன் கீழ் தற்காலிகமாக பணியமர்தப்பட்டு பணிபுரிந்த மற்றும் தற்போது பணிபுரியும் விண்ணப்பதாரர்களிடமிருந்து பெறப்படும் விண்ணப்பங்கள் மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றத்தால் நீதிப்பேராணை எண்.6378/2018 மற்றும் அத்துடன் இணைந்த வழக்குகளில் 30.04.2019 அன்று பிறப்பிக்கப்பட்டுள்ள உத்தரவுக்கிணங்க பரிசீலிக்கப்படும்.

14. ஆதரவற்ற விதவைக்கான முன்னுரிமை கோரும் விண்ணப்பதாரர்கள், வருவாய் கோட்ட அலுவலர் அவர்களிடமிருந்து உரிய படிவத்தில் பெறப்பட்ட சான்றிதழின் நகலை கண்டிப்பாக விண்ணப்பத்துடன் இணைத்து அனுப்பபடவேண்டும்.

புதுக்கோட்டை
நாள்: 27.09.2021.

முதன்மை மாவட்ட நீதிபதி,
முதன்மை மாவட்ட நீதிமன்றம்,
புதுக்கோட்டை.

விண்ணப்பபடிவம்

சுயசான்றொப் பமிட்ட விண்ணப்பதா ரரின் பாஸ்போட் அளவு புகைப்படம்

1	விண்ணப்பிக்கும் பதவியின் பெயர்	:	சுருக்கெழுத்து தட்டச்சர் நிலை - 3		
2	விண்ணப்பதாரரின் பெயர் (ஆங்கிலத்தில்) சான்றிதழில் உள்ளபடி	:			
	விண்ணப்பதாரரின் பெயர் (தமிழில்) சான்றிதழில் உள்ளபடி	:			
3	தந்தை / கணவர் பெயர்	:			
4	பிறந்த தேதி	:	நாள்	மாதம்	ஆண்டு
5	பாலினம்	:	ஆண் / பெண்		
6	1)கல்வி தகுதி	:			
	2) தொழில்நுட்பக் கல்வி தகுதி (தட்டச்சு, சுருக்கெழுத்து, கணிணி அறிவு) (உரிய சான்றிதழ்களின் நகல்களை இணைக்கவும்)	:			
	3)கூடுதல் தகுதி (உரிய சான்றிதழ்களின் நகல்களை இணைக்கவும்)	:			
7	கம்யூனிட்டி (உரிய சான்றிதழை இணைக்கவும்)	:	(OC / BC / MBC / SC / SCA / ST)		
8	ஜாதி (உட்பிரிவுடன்)	:			
9	தேசியம் / மதம்	:			
10	வசிப்பிடம் (நகரம் / மாவட்டம்)	:			
11	திருமணம் ஆனவரா?	:			

12	நிரந்தர முகவரி	:	
13	முன்அனுபவம் உள்ளவரா? (ஆம் எனில் அதற்கான சான்றிதழை இணைக்கவும்)	:	
14	முன்னுரிமை கோருபவரா ? (ஆம், எனில் அதற்கான சான்றிதழை இணைக்கவும்)	:	
	1. ஆதரவற்ற விதவை 2. மாற்று திறனாளி 3. முன்னாள் இராணுவத்தினர் மற்றும் முன்னாள் இராணுவத்தினரை சார்ந்தவர் 4. கலப்பு திருமணம் 5. மற்றவை .	: : : : :	
15	தமிழ் வழிக்கல்வி முன்னுரிமை கோரருபவரா ? (ஆம் எனில் அதற்கான சான்றிதழை இணைக்கவும்)	:	ஆம் / இல்லை
16	குற்றவழக்கில் தண்டனை பெற்றவரா?	:	ஆம் / இல்லை
17	விண்ணப்பதாரருக்கு எதிராக எந்த குற்றவியல் வழக்கும் நிலுவையில் உள்ளதா ? ஆம் எனில் அதன் விவரம்.	:	ஆம் / இல்லை
18	இணைப்புகளின் பட்டியல்	:	

மேலே வழங்கப்பட்ட அனைத்து விவரங்களும் உண்மை என உறுதி அளிக்கிறேன்.

இடம்: விண்ணப்பதாரரின் கையொப்பம்

நாள் :